கடிதம் வென்றவர்
தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு

అక్షర విజేత

ಅಕ್ಷರ ವಿಜೇತ
ಎಡಿಟರ್: ಅನಿಲ್‌ಕುಮಾರ್

| Monday 01 September 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 12 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
| --- | --- | --- | --- | --- | --- |



# உற்று பார்க்கும் டிரம்ப்.. கைகோர்க்கும் "டிராகன்- யானை.."

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் வருடாந்திர உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் தொடங்கி இருக்கிறது. இன்றும் நாளையும் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி சீனாவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கிறார். கிட்டதட்ட 7 ஆண்டுகளுக்கு பின் மோடி சீனாவுக்கு சென்றிருக்கிறார்.

மோடியின் சீன பயணம்: டிரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைக்கு மத்தியில் மோடியின் சீன பயணம் அமைந்துள்ளது. தனி விமானம் மூலம் சீனாவின் தியான்ஜின் விமான நிலையத்திற்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்தியா மீதான அமெரிக்காவின் வரி விதிப்பால் சீனாவும் இந்தியாவும் நெருங்கி வர தொடங்கி இருக்கின்றன. பிரதமரின் சீனப்பயணமும் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடும் அதற்கு சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்தி தந்திருக்கிறது.

மோடி - ஸீ ஜின்பிங் சந்திப்பு: இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் மோடி சீன அதிபர் ஸீ ஜின் பிங்கை சந்தித்து பேசினார். அப்போது இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையே இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, வர்த்தகம் , எல்லை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பரவலாக ஆலோசனை நடத்தப்பட்டது.

பெரிய பொறுப்பு: இந்த சந்திப்பின்போது உரையாற்றிய சீன அதிபர் ஸீ ஜின் பிங் சீனாவும் இந்தியாவும் பழம்பெரும் நாகரிகங்களைக் கொண்ட கிழக்கத்திய நாடுகள், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டு நாடுகள், மேலும் சர்வதேச பிராந்தியத்தின் முக்கிய உறுப்பினர்கள் என குறிப்பிட்டார். இருநாட்டு மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவது, ஒற்றுமை மற்றும் புத்துணர்ச்சியை ஊக்குவிப்பது , மனித சமூகத்தின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பது போன்ற வரலாற்று பொறுப்பை நாம் இருவரும் சுமக்கிறோம் என அப்போது அவர் தெரிவித்தார்.

யானை டிராகன் ஒற்றுமை: நாம் சிறந்த நட்புறவுகளை கொண்ட அண்டை நாடுகளாகவும், ஒருவருக்கொருவர் வெற்றியை பெற வைக்கும் கூட்டாளிகளாகவும் இருக்க வேண்டும், யானையும் டிராகனும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டியது முக்கியம் என தெரிவித்தார். இந்தியா சீனா இடையிலான ராஜாங்க ரீதியிலான உறவு தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் என்ற மைல் கல்லை எட்டி இருப்பதை சுட்டிக்காட்டி பேசிய ஜின் பிங், நீண்ட கால அடிப்படையில் இந்த உறவை புத்துணர்ச்சியோடு கொண்டு செல்வதற்காக இரு நாடுகளும் பாடுபட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.உலகம் முழுவதும் அமைதியையும் வளத்தையும் கொண்டு வர வேண்டிய பொறுப்பு நம் இரு நாடுகளுக்கும் இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

# மதுரையில் நடக்கவிருந்த ஓபிஎஸ் மாநாடு ஒத்திவைப்பு



கடிதம் வென்றவர், | மதுரை:

செப்டம்பர் 4ல் மதுரையில் நடக்கவிருந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணியின் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. என்டிஏ கூட்டணியில் இருந்து வெளிவந்த போது ஓபிஎஸ் தரப்பு மதுரையில் மாநாடு நடத்தும் என்று அறிவித்திருந்த நிலையில், தற்போது ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பதிலாக ஓபிஎஸ் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்றும் கூறப்படுகிறது.அண்மையில் பிரதமர் மோடி தமிழ்நாடு வந்த போது, அவரை வரவேற்க முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அனுமதி கோரி இருந்தார். இதற்காக கடிதம் அனுப்பிய போதும், அனுமதி கிடைக்கவில்லை. அதேபோல் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனை தொடர்பு கொண்ட போதும், ஓபிஎஸ் அழைப்புக்கு செவி சாய்க்கப்படவில்லை. இதனால் ஓபிஎஸ் தரப்பு அதிருப்தியில் இருந்தது.

# ஆபரேஷன் தென் மாவட்டம்..



கடிதம் வென்றவர், | தூத்துக்குடி:

தமிழக சட்டமன்றத் தேர்தல் வரலாற்றில் கோவில்பட்டி தொகுதியை இதுவரை திமுக ஒருமுறை கூட நேரடியாக போட்டியிட்டு வென்றதே இல்லை. ஆனால் இம்முறை கனிமொழியின் கவனம் கோவில்பட்டி தொகுதியில் தீவிரமாக இருந்து வருகிறது. ஏற்கனவே கோவில்பட்டி தொகுதியில் திமுக தேர்தல் பணிகளை தொடங்கிவிட்ட நிலையில், தனி மாவட்டமாக அறிவிக்கவும் வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் மட்டுமே உள்ளது.

## மதுரையில் நடக்கவிருந்த ஓபிஎஸ் மாநாடு ஒத்திவைப்பு



இதன்பின் ஓபிஎஸ் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து ஓபிஎஸ் வெளியேறுவதாக அறிவித்தார். அந்த அறிவிப்பு வெளியான பின், முதல்வர் ஸ்டாலினை நேரில் சென்று சந்தித்து ஆலோசனை நடத்தி இருந்தார். இதனிடையே ஓபிஎஸ் தரப்பு செப்.4ல் மதுரையில் மாநாடு நடத்த இருப்பதாக அறிவித்தது.ஆனால் என்டிஏ கூட்டணியில் இருந்து வெளியேறியதால், மாநாடு நடக்குமா என்ற சந்தேகம் எழுந்தது. இந்த நிலையில் செப்டம்பர் 4ல் மதுரையில் நடக்கவிருந்த மாநாடு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதமே மாநாட்டுப் பணிகள் தொடங்கப்பட வேண்டியிருந்தது. ஆனால் மாநாட்டுப் பணிகள் எதுவும் நடக்கவில்லை. அதற்கு பதிலாக ஓபிஎஸ் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தேனி, திருநெல்வேலி, ராமநாதபுரம், சிவகங்கை, பரமக்குடி, மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் ஓபிஎஸ் சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஆலோசனை நடத்தி இருக்கிறார். தேவர் ஜெயந்தி நெருங்கி இருக்கும் சூழலில், ஓபிஎஸ் அடுத்த சில வாரங்களில் அரசியல் பணிகளை தீவிரப்படுத்துவார்.

# ஆபரேஷன் தென் மாவட்டம்..

ஏற்கனவே திமுக மற்றும் அதிமுக உள்ளிட்ட கட்சிகள் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்ட நிலையில், திமுக தொடர்ந்து 2வது முறையாக ஆட்சி அமைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காக தென் மாவட்டங்களில் திமுக கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.அந்த வகையில் இதுவரை திமுககைக்குள்ட்டாத ஒரு தொகுதியில் முக்கியமான ஒன்று கோவில்பட்டி. 1962, 1989,2001மற்றும்2016 என்று 4 முறை திமுக நேரடியாக போட்டியிட்டபோதும், ஒருமுறைக் கூட வென்றதே இல்லை. 2016தேர்தலில்கூட428 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. இதனால் 2021ஆம் ஆண்டு கோவில்பட்டி தொகுதியை சிபிஎம் வசம் திமுக கொடுத்தது.இல் காலையிலேயே ஊருக்குள் வந்த யானை.. கார், பைக் ஓட்டிகளை மிரள வைத்தசம்பவம் கடந்த தேர்தலில் சிபிஎம் கூட 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அதிமுகவுக்குவெற்றி கிடைத்த நிலையில், 2வது இடத்தை டிடிவி தினகரன் பிடித்தார். ஆனால் இம்முறை கோவில்பட்டியில் திமுகவை வெல்ல வைக்க வேண்டும் என்பதில் உடன்பிறப்புகள் தீவிரமாகபணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி இருப்பதால், கனிமொழியும் தொடர்ச்சியாக கோவில்பட்டிக்கு வந்துசெல்கிறார்.



ஒவ்வொரு முறையும் தூத்துக்குடி வந்து செல்லும் போதும், கோவில்பட்டிக்கு தவறாமல் வருகிறார் கனிமொழி. இதனால் கோவில்பட்டியில் திமுக நிர்வாகிகள் உற்சாகத்தில் உள்ளனர்.
அதுமட்டுமல்லாமல் கோவில்பட்டி தொழில் சார் பகுதி என்பதால், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தாக்கல் அதிகமாகும். ஆனால் கடம்பூர் ராஜூவுக்கு எதிராக நேரடியாக திமுக வேட்பாளரை களமிறக்க திமுக திட்டமிட்டு வருகிறது. இல் காலையிலேயே ஊருக்குள் வந்த யானை.. கார், பைக் ஓட்டிகளை மிரள வைத்த சம்பவம் கடந்த தேர்தலில் சிபிஎம் கூட 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது. அதிமுகவுக்கு வெற்றி கிடைத்த நிலையில், 2வது இடத்தை டிடிவி தினகரன் பிடித்தார். ஆனால் இம்முறை கோவில்பட்டியில் திமுகவை வெல்ல வைக்க வேண்டும் என்பதில் உடன்பிறப்புகள் தீவிரமாக பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி இருப்பதால், கனிமொழியும் தொடர்ச்சியாக கோவில்பட்டிக்கு வந்து செல்கிறார்.ஒவ்வொரு முறையும் தூத்துக்குடி வந்து செல்லும் போதும், கோவில்பட்டிக்கு தவறாமல் வருகிறார் கனிமொழி. இதனால் கோவில்பட்டியில் திமுக நிர்வாகிகள் உற்சாகத்தில் உள்ளனர்.

# தமிழகத்தில் 4 சுங்கச் சாவடிகளில் இன்று முதல்

## கட்டணம் உயர்வு! எதிர்க்கும் எதிர்க்கட்சிகள்!



சென்னை: தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் நான்கில் இன்று முதல் புதிய கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது. இந்த விலை உயர்வுக்கு பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலையில் 78 சுங்கச்சாவடிகள் உள்ளன. இவற்றில் ஆண்டுக்கு ஒரு முறை 5 முதல் 10 சதவீதம் வரை கட்டணத்தை உயர்த்திக் கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.அதன்படி ஏப்ரல் மாதம் 40 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, பெரம்பலூர் மாவட்டம் திருமாந்துறை, திருச்சி மாவட்டம் சமயபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுங்கச் சாவடிகளில் இன்று முதல் கட்டணம் உயர்த்தப்படுகிறது.கார், ஜீப் போன்றவை ஒரு முறை பயணிப்பதற்கான கட்டணத்தில் மாற்றம் இல்லை. இரு முறை பயணிப்பதற்கான கட்டணத்தில் 5 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. மாதாந்திர கட்டணத்தில் ரூ 70 உயர்த்தப்பட்டுள்ளது.பல அச்சு வாகனங்கள் ஒரு முறை பயணிக்க 15 ரூபாயும் இரு முறை பயணிக்க 20 ரூபாயும் மாதாந்திர கட்டணத்தில் 395 ரூபாயும் உயர்த்தப்பட்டுள்ளது. மீதமுள்ள சுங்கச் சாவடிகளிலும் விரைவில் கட்டணம் உயர்த்தப்படுகிறது.இதை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை. இதனால் வாகன ஓட்டிகளுக்கு எந்த சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்கிறது என்கிற விவரங்கள் தெரியவில்லை.சுங்கக் கட்டண உயர்வால் தனியார் வாகனங்களின் வாடகை உயர்த்தப்படும். இதனால் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் உயரக் கூடும். இதனால்தான் சுங்கக் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும் என அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

# "உங்கள் சகோதரன்தான் முதலமைச்சராக இருக்கிறான் என்ற உரிமையோடு வாங்க"




கடிதம் வென்றவர், | டசெல்டோர்ப்:

தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு ஜெர்மனி வாழ் தமிழர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். டசெல்டோர்ப் நகரில் நடக்கும் உயர்நிலை முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார் ஸ்டாலின்.இன்று ஜெர்மனி பயணத்தை முடித்துக்கொண்டு லண்டன் புறப்படுகிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின். அங்கு வரும் 7 ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.
ஜெர்மனியில் ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழக முதல்வர் ஸ்டாலின் சனிக்கிழமை காலை 9 மணிக்கு விமானத்தில் சென்னையில் இருந்து ஜெர்மனிக்கு புறப்பட்டுச் சென்றார். முதல்வர் ஸ்டாலினின் மனைவி துர்கா ஸ்டாலின், முதல்வர் ஸ்டாலினின் செயலர்கள், அமைச்சர் டிஆர்பி ராஜா, பாதுகாப்பு அதிகாரிகளும் உடன் சென்றனர். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் ஜெர்மனி சென்றடைந்தார் ஸ்டாலின்.அங்கு வடரைன் வெஸ்ட்பாலியா மாகாணத்தின் முதல்வர் ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பில், அவரது அரசின் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசுமுறை வரவேற்பு பிரிவைச் சேர்ந்த அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்திய தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே, பிராங்க்பர்ட்டில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் பொறுப்பு துணைத்துதூதர் விபாகாந்த் ஷர்மா ஆகியோர் முதல்வர் ஸ்டாலினை வரவேற்றனர்.

# தவெகவில் நடக்கப்போகும் அதிரடி மாற்றம்..

## மாவட்ட செயலாளர்களுக்கு பனையூரில் இருந்து பறந்த உத்தரவு!





சென்னை: தமிழக வெற்றிக் கழகத்தின் தலைமையில் இருந்து மாவட்ட செயலாளர்களுக்கு ஒரு முக்கிய உத்தரவு பறந்துள்ளது. 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றிய செயலாளர் நியமனம் செய்ய தவெக தலைமை உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் மும்முரமாக தயாராகி வருகின்றன. திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி, தவெக என நான்கு முனை போட்டி கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. விஜய்யின் தவெக, வலுவான கூட்டணியை அமைக்க முயன்று வருகிறது. தவெக சந்திக்கும் முதல் தேர்தல் என்பதால் அக்கட்சியினர் உற்சாகமாக பணியாற்றி வருகின்றனர்.அந்தவகையில் தமிழக வெற்றிக் கழகம் 2026 சட்டமன்ற தேர்தலை இலக்காகக் கொண்டு தீவிரமாக கட்சியை வலுப்படுத்தி வருகிறது. அண்மையில் மதுரையில் தவெகவின் 2வது மாநில மாநாடு நடந்தது. இதையடுத்து தவெக தலைவர் விஜய், தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். செப்டம்பர் மாதத்தில் விஜய், தமிழ்நாடு முழுவதும் பயணிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தவெகவின் கொள்கை தலைவர்களில் ஒருவரான பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம்தேதி, ஈரோட்டில் இருந்து முதல் மக்கள் சந்திப்பை நடத்த விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.இதற்கிடையே, தவெக தலைமைக் கழகத்தில் இருந்து மாவட்ட செயலாளர்களுக்கு ஒரு முக்கிய உத்தரவு பறந்திருக்கிறதாம். அதாவது, தமிழக வெற்றிக் கழகத்தில் சட்டமன்ற தொகுதிக்கு ஒரு ஒன்றிய செயலாளர் இருந்த நிலையில், தற்போது 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றிய செயலாளர் நியமனம் செய்ய மாவட்ட செயலாளர்களுக்கு தலைமை உத்தரவிட்டுள்ளது.

கட்சியில் பூத் கமிட்டி நிர்வாகிகள் நியமனம் முறையாக தற்போது வரை நடைபெறாத நிலையில் ஒன்றிய செயலாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் வாக்கு சாவடிக்கு, சம்பந்தமே இல்லாத நபர்களை கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களாக நியமனம் செய்திருந்த நிலையில் பூத் முகவர்களை முறையாக நியமனம் செய்ய வேண்டும் என்று ஏற்கனவே எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தது.இந்த நிலையில் தமிழ்நாடு முழுவதும் 25 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றிய செயலாளர் என பிரித்து ஒன்றிய செயலாளர் பொறுப்புகளுக்கு ஆட்களை நியமிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. விஜய் சுற்றுப்பயணத்தை தொடங்குவதற்குள் ஒன்றிய செயலாளர்கள் நியமனத்தை முடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஜய்யின் சுற்றுப்பயணம் தொடர்பாக நேற்று சென்னை பனையூரில் அமைந்துள்ள தவெக அலுவலகத்தில் 20 மாவட்ட செயலாளர்களுடன் தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த் ஆலோசனை நடத்தினார். இந்த சந்திப்பின்போது ஒன்றிய செயலாளர்களை நியமிப்பது தொடர்பான இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


# தனக்கு எதிராக போராடிய பாஜகவினரை அழைத்து..



பாட்னா: ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பாஜகவினர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த நிலையில், அந்த வழியாக சென்ற ராகுல் காந்தி போராட்டத்தில் ஈடுபட்ட பாஜகவினரை அழைத்து சாக்லேட் கொடுத்திருக்கிறார்.பீகாரில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்நிலையில் அம்மாநிலத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த நடவடிக்கை கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் 65 லட்சம் வாக்காளர் நீக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. ஆனால் இதை ஏற்காத காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், பாஜக தேர்தல் ஆணையத்தின் உதவியின் மூலம் வாக்கு திருட்டில் ஈடுபட்டிருப்பதாக விமர்சித்துள்ளன. இந்த விவகாரத்தை மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாற்ற காங்கிரஸ் சார்பில் வாக்காளர் அதிகாரம் யாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பீகார் முழுவதும் ராகுல் காந்தி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். இந்நிலையில் தர்பங்காவில் பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா அமைப்பினர் காங்கிரஸுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். காங்கிரஸ் மேடையில் வைத்து பிரதமரையும், அவரது தாயையும் தொண்டர் ஒருவர் அவதூறாக பேசியிருந்தார். இந்த சம்பவத்தை கண்டித்தும், காங்கிரஸ் கட்சியை கண்டித்தும் இந்த போராட்டம் நடந்தது. அந்த வழியாக காரில் வந்த ராகுல் காந்தி உடனே காரை நிறுத்தி போராட்டக்காரர்களை அழைத்து சாக்லேட் கொடுத்திருக்கிறார். இந்த சம்பவம் பீகார் அரசியலில் கவனம் பெற்றிருக்கிறது.

முன்னதாக அவதூறு பேச்சு தொடர்பாக சம்பந்தப்பட்ட நபரை காவல்துறை கைது செய்திருந்தது. அதேபோல, பாட்னாவில் பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சியினரிடையே இந்த விவகாரம் தொடர்பாக கைகலப்பும் ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.






# சென்னைக்கு மழை இருக்கா? டெல்டாவுக்கு போகும் கார்மேகங்கள்..

சென்னை: தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இந்நிலையில் இன்றும் நாளையும் சென்னையில் மழை பெய்யுமா? என தனியார் வானிலை ஆர்வலர் விளக்கமளித்திருக்கிறார்.தனியார் வானிலை ஆர்வலர் COMK தனது டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது, "தமிழ்நாட்டின் சமவெளிப் பகுதிகளில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. டெல்டா பகுதிகளில் சில இடங்களில் நல்ல மழை காணப்படுகிறது. சேலத்திற்கு அருகிலும் சில இடியுடன் கூடிய மழை மேகங்கள் தென்படுகின்றன.சென்னை சென்ட்ரல் தொடங்கி எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, ஐஓசி, கோயம்பேடு, அண்ணாநகர், கொளத்தூர், வில்லிவாக்கம், பாடி, அயனாவரம் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேல் கனமழை பெய்து வருகிறது.முன்னதான சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்திருந்த அறவிப்பில், "மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று தொடங்கி செப்.1 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

செப்.2-5 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு:
அதிகபட்ச வெப்பநிலை மாறுதலின் போக்கை பொறுத்தவரை இன்றும் நாளையும் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3" செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.இயல்பு நிலையிலிருந்து அதிகபட்ச வெப்ப அளவின் வேறுபாட்டை பொறுத்தவரை இன்றும் நாளையும் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், அதிகபட்ச வெப்பநிலை 2-3 செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.
சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:
இன்று (30-08-2025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில், லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28* செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.
நாளை (31-08-2025) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில், லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்ணாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது.
SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com